# P.K.R ARTS COLLEGE FOR WOMEN

(Accredited with 'A' Grade by NAAC)
An autonomous institution – Affiliated to Bharathiar University
No.21 Pariyur Road, GOBICHETTIPALAYAM – 638476.

## MEETING OF BOARD OF STUDIES IN 2020-2021

**DATE:03.07.2020** **TIME:11-AM** **VENUE:** Google meet

## BOS MEETING MINUTES

- **நிறைவேற்றப்பட வேண்டிய தீர்மானங்கள்:**
- 2020-2021 ஆம் கல்வியாண்டில் பாடத்திட்டக்குழு கூட்டத்தில் கூறப்பட்ட பரிந்துரைகள் உறுதி செய்யப்பட்ட நாள் 9.4.2019
- 2020-2021 ஆம் கல்வியாண்டில் பாடத்திட்டக்குழுக் கூட்டத்தில் தீர்மானங்கள் ஏற்றுக் கொள்ளப்பட்ட நாள் 9.4.2019
- 2020-2021 ஆம் கல்வியாண்டில் முதுகலைப் பயில்வோருக்கான நான்கு பருவங்களுக்கான பாடத்திட்டங்களுக்குப் பாடத்திட்டக்குழு பரிந்துரையின் அடிப்படையில் ஒப்புதல் பெறுதல்.
- 2020-2021 ஆம் கல்வியாண்டில் இளங்கலைப் பயில்வோருக்கான ஆறு பருவங்களுக்கான பாடத்திட்டக்குழு ஒப்புதல் பெறுதல்.
- 2020-2021 ஆம் கல்வியாண்டில் இளங்கலைப் பொதுத்தமிழ் பயில்வோருக்கான நான்கு பருவத்திற்குமான பாடத்திட்டத்திற்கு பாடத்திட்டக்குழு ஒப்புதல் பெறுதல்.
- தமிழ்மொழி அல்லாத பிறமொழிப் பாடங்களுக்கு பாடத்திட்டக்குழு பரிந்துரையின் அடிப்படையில் ஒப்புதல் பெறுதல்.
- வினாத்தாள் அமைப்புக்குழு,செயல்முறைத் தேர்வு,விடைத்தாள் திருத்தும் குழுவிற்கானத் தேர்வாளர்கள் பெயர்பட்டியலைப் பரிந்துரை செய்தல்.
- 2020-2021 ஆம் கல்வியாண்டில் இளங்கலை,முதுகலை மாணவிகள் பாடத்தின் தேர்வினை தமிழில் எழுத ஒப்புதல் பெருதல்.

- **நிறைவேற்றிய தீர்மானங்கள்:**
- **இளநிலைப் பொதுத்தமிழ்:**
- **2020 -2021 ஆம் கல்வியாண்டின்** இளநிலைப் பொதுத்தமிழ் பயிலும் மாணவர்களுக்கான முதல் பருவ பாடத்திட்டத்தில் அலகு-5 இலக்கணப் பகுதியில் மொழித்திறன் பயிற்சியும்,மொழிப்பெயர்ப்பும் வைக்கும் படி பாடத்திட்டக்குழு உறுப்பினர்கள் ஆலோசனை வழங்கினர்.
- நவீன பெண் எழுத்தாளர் ஆண்டாள்பிரியதரிசனியின் கவிதை மற்றும் சிறுகதை இடம்பெறுவதால் ஏதேனும் ஒன்றினை நீக்கி வேறு பெண் எழுத்தாளர்களின் படைப்புகளை வைக்குமாறு ஆலோசித்தனர்.

- இளநிலை பொதுத்தமிழ் இரண்டாம் பருவத்தில் வைக்கப் பட்டிருந்த தனிப்பாடல் திரட்டு பகுதியினைக் குறைத்து பக்திஇலக்கியம்,சிற்றிலக்கியமும் இணைக்கும்படி கூறினர்.
- இளநிலை பொதுத்தமிழ் மூன்றாம் பருவத்தில் சிலப்பதிகாரக் காப்பியத்தின் வழக்குரைக் காதையினை நீக்கி ,அடைக்கலக் காதையினை வைக்குமாறு பரிந்துரைத்தனர்.
- அதுபோல் மூன்றாம் பருவத்தில் அலகு-5 ல் வைத்துள்ள 'ஐம்பெரும்காப்பியம்' எனும் தலைப்பிற்கு பதிலாக காப்பியங்களின் தோற்றமும்,வளர்ச்சியும் என்று குறிப்பிடலாம் எனவும்,இலக்கணத்தில் விருத்தப்பாவும் வைக்கலாம் எனவும் கருத்துரைக்கப்பட்டது.
- இளநிலை பொதுத்தமிழ் நான்காம் பருவத்திற்குரிய பாடத்திட்டத்தில் சங்க இலக்கிய எட்டுத்தொகை நூல்கள் அனைத்தையும் வரிசைப்படுத்தி வைக்குமாறு கூறினர்.
- அதுபோல் அலகு-5 ல் படைப்பிலக்கியப் பயிற்சியில் மாணவிகள் சுயமாக கவிதை,சிறுகதை,பொதுக்கட்டுரை எழுதும் பகுதியினை இணைக்கலாம் என்றனர்

**இளங்கலைத் தமிழ்:**

- பாடத்திட்டக்குழு உறுப்பிணர்கள் **இளங்கலைத் தமிழ் இலக்கியம்** முதல் பருவம் தமிழ் இலக்கிய வரலாறு பாடத்திட்டத்தில் சங்க இலக்கியத்துடன் இணைத்து வைக்கப்பட்ட அறஇலக்கியத்தினை தனியே வைக்க அறிவுறுத்தினர்.
- இளங்கலைத் தமிழ் இலக்கியம் இரண்டாம் பருவத்தில் சமய இலக்கியப் பாடத்திட்டத்தில் சைவத்துடன் வைணவம், கிறித்துவம்,இசுலாமியம் இலக்கியங்களையும் சேர்த்து வைக்க அறிவுறுத்தினர்.
- ஆறாம் பருவத்தில் வைக்கப்பட்ட காப்பியம் தற்போது இரண்டாம் பருவத்திலேயே பாடமாக வைக்கப்படுகிறது.
- இளங்கலைத் தமிழ் இலக்கியம் நான்காம் பருவத்தில் நாடகத் தமிழ் பாடத்திட்டத்தில் அண்ணாவின் இரு நாடகங்கள் பாடமாக வைக்கப்பட்டிருந்தன.அதில் ஒரு நாடகத்தினை நீக்கி விட்டு வேறு ஒரு ஆசிரியரின் நாடகக்கத்தினை வைக்கப் பரிந்துரைத்தனர்.

2020-2021 ஆம் கல்வியாண்டில் இளங்கலை மாணவிகளுக்காக பாடத்திட்டத்தில் Value Added Couse-இதழியல் வைக்கப்பட்டுள்ளது.

. இளங்கலை 5-ஆம் பருவத்தில் இடம் பெறும் இலக்கியத் திறனாய்வு எனும் பாடத்திற்குரிய ச.ஏ.ஞானமூர்த்தியின் பாடநூல் மாற்றப்பட்டு,க.பஞ்சாங்கம் அவர்களின் 'தமிழ் இலக்கியத் திறனாய்வு' எனும் நூல் பாடநூலாக வைக்கப்பட்டுள்ளது.

. ஒப்பிலக்கியத் திறனாய்வு எனும் பாடத்தின் பாடத்திட்டம் பாடச்சுமைக் கருதி குறைக்கப்பட்டுள்ளது.

- இளங்கலைத் தமிழ் இலக்கியம் ஆறாம் பருவத்தில் சங்க இலக்கியம் பாடத்திட்டத்தில் எட்டுத்தொகை நூல்களுடன் பத்துப்பாட்டு இலக்கியங்களை வைக்கும்படியும்,முல்லைப்பாட்டு முழுவதும் வைக்கலாம் என்றும் பரிந்துரைத்தனர்.

**முதுகலைத்தமிழ் :**

- முதுகலைத்தமிழ் இலக்கியம் முதல் பருவத்தில் இக்கால இலக்கியம் பாடத்திட்டத்தில் சிறுகதைகளை அதிகப் படுத்தும்படியும்,சாகத்திய அகாதமி பரிசுப் பெற்ற புதினங்களைப் வைக்குமாறும் பாடத்திட்டக் குழுவினர் ஆலோசனை வழங்கினர்.
- முதுகலைத்தமிழ் இலக்கியம் இரண்டாம் பருவத்தில் தகவல் தொடர்பியல் பாடத்திற்குரிய பாடநூல் 2015 ஆம் ஆண்டிற்கு பிந்தைய நவீன நூலை வைக்க அறிவுறித்தினர்.
- முதுகலைத்தமிழ் இலக்கியம் மூன்றாம் பருவத்தில் open Elective பாடத்திற்கு வைக்கப் பட்டிருந்த 'கள்ளிக்காட்டு இதிகாசம்' புதினத்திற்கு பதிலாக பழைய,நவீன,இடைக்கால மற்றும் பெண் எழுத்தாளர்கள் என்ற அடிப்படையில் குறைந்தது நான்கு புதினங்களை வைக்கும்படி பரிந்துரைத்தனர்.
- அதுபோல் மூன்றாம் பருவ மாணவிகளுக்கு SELF STUDYpaper வைரமுத்துவின் சிறுகதைகளை நீக்கி விடுதலைக்கு முந்தைய,விடுதலைக்கு பிந்தைய எனும் நிலையில் பல்வேறு ஆசிரியர்களின் சிறுகதைகளை வைக்குமாறு கருத்துரைத்தனர்.
- முதுகலைத்தமிழ் இலக்கியம் நான்காம் பருவத்தில் இடம்பெற்ற சங்க இலக்கியம் பாடத்திட்டம் கூடுதலாக்கும்படியும்,சேர,சோழ,பாண்டியர் வரலாறு பட்டும் வைக்காமல் இதனுடன் அக்கால இலக்கியமும் வைக்கலாம் என்றும் ஆலோசனைக் கூறினர்.

2020-2021 ஆம் கல்வியாண்டில் முதுகலை மாணவிகளுக்காக பாடத்திட்டத்தில் Value Added Couse- வைக்கப்பட்டுள்ளது.

## அனைத்துத் துறை சார்ந்து செய்யப்பட்ட மாற்றங்கள்:

.core optional என்பது part IV ல்open elective என மாற்றப்பட்டது.

. இளங்கலை இரண்டாம் பருவத்திற்குரிய yoga and value Education என்ற பாடப்பிரிவு yoga and Ethics என்று மாற்றப்பட்டுள்ளது.

. இளங்கலை மூன்றாம் பருவத்தில் Skill Enhancement என்று வழங்கப்பட்ட Information security எனும் பாடப்பகுதி தற்போது Ability EnhancementIஎன மாற்றப்பட்டுள்ளது.

. அதுபோல் Non Major Elective Iபிரிவில் இருந்த Basic Tamilஎன்பது Advanced Tamil என மாற்றப்பட்டுள்ளது.இப்பருவத்தில் இருந்த Non Major Elective II நீக்கப்பட்டுள்ளது.

. இளங்கலை நான்காம் பருவத்தில் இருந்த Non Major Elective III என்பது Ability EnhancementII என்று மாற்றப்பட்டு அதன் பாடப் பகுதியாக இருந்த Career Enhancement நீக்கப்பட்டு Life Skills எனும் பாடப்பகுதி இணைக்கப் பட்டுள்ளது

. இளங்கலை 5-ஆம் பருவத்தில் Core XXV பிரிவில் இடம்பெற்ற Comprehension in Tamil;III என்பது நீக்கப்பட்டு Comprehension(paper-5) என்று வைக்கப்பட்டுள்ளது.அதுபோல் Core XXVI பிரிவில் Institutional Training மட்டும் இருந்தது. இப்போது இதனுடன் Articleship Training/Mini Project இணைக்கப்பட்டுள்ளது.

. Skill Enhancement III பிரிவில் இடம்பெற்றசைவசித்தாந்தம் என்ற பகுதி நீக்கப்பட்டு Life Skills(soft skills/Entrepreneur ship skills/Homepreneur ship) என்று மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

. இளங்கலை 6-ஆம் பருவத்திற்குரிய Extension Activity என்ற பிரிவானது Community Engagement என மாற்றப்பட்டு அதன் பாடப் பகுதியாக இருந்த Department Extension Activity யை நீக்கி அதற்கு பதிலாக Students Social Activity(curriculum related),Life Skills(soft skills/Entrepreneur ship skills/Homepreneur ship) என்ற பகுதி இணைக்கப்பட்டுள்ளது.

---